# மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களிடையே நாடகமும் அரங்கியலும் பாடத்துறையானது பெற்றுள்ள செல்வாக்கு ஓர் ஆய்வு


ஆய்வாளர் : செல்வி வரலக்ஷ்மி ராசரெட்ணம்

பதிவிலக்கம் : EU/PGS/2008/MA(DT)/07

சுட்டிலக்கம் : PGS/MA(DT)/31



Eastern University, Sri Lanka
Academic Affairs Department
12 DEC 2018

LIBRARY
08 JAN 2019
EASTERN UNIVERSITY, SRI LANKA.

MA25
Thesis
Library - EUSL



நுண்கலைத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை


2017




PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை

ஒவ்வொரு தனிமனித உருவாக்கத்திலும் பாடசாலைக் கல்விக்கு முக்கியமானதொரு இடமுண்டு. மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் குறிப்பிட்ட பங்கை பாடசாலைக் கல்வியிலே செலவிடுகின்றனர். இக் கல்வியின் மூலம் மாணவர்கள் சமூக இயல்பியக்கத்தில் இணைந்து வாழ்வதற்கான பல்வேறு திறன்களும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் பாடத்துறைகள் பலவும் பரீட்சையை மையப்படுத்தியதாகவே அமைந்து விடுகின்றன. பரீட்சையில் மாணவர்கள் சித்தி பெற வேண்டும் எனும் நோக்கில் ஆசிரியர்கள் வழிப்படுத்துகின்றனர். பிள்ளைகள் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்று தமக்கு பெருமை சேர்க்க வேண்டும் என பெற்றோர்களும், பிள்ளைகளுக்கு பாடங்களை திணிக்கின்றனர். இதனால் மாணாக்கர் பரீட்சைக்காகவே தமது வாழ்நாட்களை செலவிடுகின்றனர். இவ்வாறாக பல அழுத்தங்களுக்கு உள்ளான மாணாக்கரை மீட்க வந்த ஓர் பாடத்துறையாக நாடகமும் அரங்கியலும் காணப்படுகின்றது.

இப் பாடத்துறையின் வாயிலாக பல மாணவர்கள் ஆளுமை, திறமைகளை வளர்த்துக் கொள்வதோடு தலைமைத்துவ பண்புடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டுவதனூடாக சமூகத்தால் மதிக்கப்படும் பாராட்டப்படும் நபர்களாகவும் மாறிவிடுகின்றனர். இப்பாடத்துறையின் வாயிலாக அவர்கள் பெறும் பயிற்சிகள் நற்பிரஜைகளாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் அவர்களை மாற்றி விடுகின்றது. இச் சிறப்பு மிக்க பாடத்துறையை அடிப்படையாக கொண்டு "மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மாணவரிடையே நாடகமும் அரங்கியலும் பாடத்துறையானது பெற்றுள்ள செல்வாக்கு" எனும் தலைப்பில் இவ் ஆய்வானது மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது நான்கு அத்தியாயங்களை கொண்டு காணப்படுகின்றது. அத்தியாயம் ஒன்றில் பாடத்துறை தொடர்பான அறிமுகத்தையும் அத்தியாயம் இரண்டில் கலைத்திட்டத்தில் நாடகமும் அரங்கியலும் பற்றிய கூற்றுக்கள் நடைமுறையில் அது உள்ள முறைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தியாயம் மூன்றில் நாடகமும் அரங்கியலும் பாடத்துறையின் வாயிலாக ஏற்படும் நன்மைகளும் ஏனைய பாடத்துறையில் அதன் தாக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தியாயம் நான்கில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்கும் மாணவர்களும், ஆசிரியர்களும் எதிர்கொள்ளும் சவால்களும் அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இறுதியாக இவ் ஆய்வின் வாயிலாக அறிந்து கொண்ட விடயம் முடிவுரையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் ஆய்வானது கள ஆய்வாக அமைந்தமையால் நேரடியாக வலயக்கல்வி அலுவலகம், பாடசாலைகளுக்கு சமுகமளித்து தரவுகள் தகவல்களை பெற்றுக் கொண்டதோடு பிரதிக்கல்விப் பணிப்பாளர், பாடத்துறையோடு தொடர்பான ஆசிரியர்கள், வேறுபாட ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் போன்றோரின் நேர்காணலினூடாக பெறப்பட்ட தகவல்கள் ஆய்வில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அத்தோடு

பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் கற்பிக்கப்படும் முறைகள், செய்முறைகள் செயற்படுத்தப்படும் விதங்கள் என்பன நேரடியாக அவதானிக்கப்பட்டே இவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்தோடு பயிற்சிப்பட்டறைகள் பலவற்றிற்கு நேரடியாக சமுகமளித்து பயிற்சியாளர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களிடமிருந்து பயிற்சி தொடர்பான விடயங்கள் அதனூடாக கிடைக்கப்பெறும் அனுபவங்கள் பற்றி தகவல்கள் பெறப்பட்டு அவ் விடயங்கள் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடகமும் அரங்கியலும் பாடத்துறையானது மாணவரிடையே பெற்றுள்ள செல்வாக்கின் காரணமாக பாடத்துறையைத் தாண்டி ஓர் தனித்துவமான இடத்தினை பெற்றுள்ளது என்பது ஆய்வின் போது பெறப்பட்ட தகவல்கள், நேரடி அவதானிப்புக்கள், நேர்காணல்கள் என்பவற்றின் வாயிலாக அறிந்து கொள்ள முடிவதோடு, அவ் விடயங்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு இவ் ஆய்வுக் கட்டுரையானது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆய்வாளர்

## பொருளடக்கம்


1. உறுதியுரை v

2. நன்றியுரை vi

3. முன்னுரை vii

4. ஆய்வு முன்மொழிவு xii

**அத்தியாயம் 01அறிமுகம் 1-12**

1.1 நாடகமும் அதன் இயல்பும் 1

1.2 நாடகமும் அரங்கியலும் கல்வி புலமாதல். 3

1.3 பாடத்துறையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணகர்த்தாக்கள்: 4

1.4 நாடகமும் அரங்கியலும் பாடத்துறை மாணவர்களின் வயதிற்கேற்ப கற்பிக்கப்படும் முறை: 5

1.5 மட்டக்களப்பு கல்வி வலயத்தின் வரையறை: 7

1.6 மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் வகைகள். 7

1.7 அழகியல் பாடத்துறையினுள் இப்பாடநெறி இணைந்தமுறைகள 12

**அத்தியாயம் 02 கலை திட்டத்தில் நாடகமும் அரங்கியலும் பற்றி குறிப்பிடப்பட்டவை நடைமுறையில் அது அமைந்துள்ள முறை 13-26**

2.1 அறிமுகம் 13

2.2 கலைத்திட்டம் பற்றிய விளக்கம் 14

2.3 கலைத்திட்டத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ள முறைகள்: 15

2.4 கனிஷ்ட இறைநிலை (தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை) 16

2.5 சிரேஷ்ட இடைநிலை (தரம் 10 தொடக்கம் தரம் 11 வரை) 17

2.6 உயர்நிலை (தரம்-12 தொடக்கம் தரம்-13 வரை) 18

2.7 நாடகமும் அரங்கியலும் பாடத்தினை மாணவர்கள் தெரிவு செய்தமைக்கான காரணங்கள் 19

2.8 நாடகமும் அரங்கியலும் பாடத்தை மாணவர்கள் தேர்வு செய்வதில் காட்டும் ஆர்வம் 22

**அத்தியாயம் 03 நாடகமும் அரங்கியலும் பாடத்துறையின் வாயிலாக ஏற்படும் நன்மைகளும் ஏனைய பாடத்துறையில் அதன் தாக்கங்களும்.** 27-41

3.1 அறிமுகம் 27

3.2 நாடகமும் அரங்கியலும் பாடநெறியின் வாயிலாக மாணவர் அடையும் உடல் உள நன்மைகள்: 28

3.3 பாடத்துறையின் வாயிலாக சமூகரீதியாக மாணவர்கள் அடைந்துள்ள நன்மைகள்: 32

3.4 நாடகமும் அரங்கியலும் பாடத்துறையானது ஏனைய பாடங்களில் செலுத்தும் செல்வாக்குகள்: 35

3.5 நாடகமும் அரங்கியலும் பாடப் பயில்வு எதிர்கால வாழ்விற்குப் பயன்படும் முறைகள் 37

**அத்தியாயம் 4 நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் எதிர் கொள்ளும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்** 42-58

4.1 நாடகமும் அரங்கியலும் பாடத்துறை பல சவால்களை எதிர்நோக்குவதற்கான காரணங்கள். 42

4.2 நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள். 44

4.3 நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்பிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள். 46

4.4 சவால்களை தீர்ப்பதற்கான வழிமுறைகள். 48

4.5 நாடகமும் அரங்கியலும் பாடத்துறையினை எதிர்காலத்தில் கற்பிப்பதற்கான ஆலோசனைகள். 52